www.Padasalai.Net www.TrbTnpsc.com



# Achamillai PG TRB ECONOMICS

# நுகர்வோர் உபரி

- நுகர்வோர் உபரி கோட்பாடு, டியூபியுட் ( Dupuit ) என்ற பிரான்சு பொருளியல் அறிஞரால் 1884 இல் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இக்கோட்பாட்டிற்க்கு முழு வடிவம் கொடுத்து " நுகர்வோர் வாரம்" ( Consumer Rent ) என பெயரிட்டார்.
- இக்கோட்பாட்டை மேலும் வளப்படுத்தி " நுகர்வோர் எச்சம்" ( Consumer Surplus) என்ற பெயரில் புதுமைப்படுத்தினார்.
- பேரா.போல்டிங்க் இதனை "வாங்குவோர் எச்சம்" ( Buyer's Surplus) என்று அழைக்கின்றார்.

## விளக்கம் :

- ஒரு பொருளின் தகு விலைக்கும் ( Potential Price) உண்மை விலைக்கும் ( Actual Price) இடையே உள்ள வித்தியாசமே நுகர்வோர் உபரி எனப்படுகின்றது.
- கொடுக்கக் கூடிய விலையும் அப்பொருளிலிருந்து கிடைக்கக் கூடிய பயன்பாடும் சமமாக இருந்தால் நுகர்வோர், நுகர்வோர் உபரியை பெற முடியாது.
- பெறக் கூடிய பயன்பாடு விலையை விட அதிகமாக இருந்தால் இங்கு நுகர்வோர் உபரி காணப்படும்
- ஆகவே உபரி திருப்தியை அளவிடுவதே நுகர்வோர் உபரி என்றும், நுகர்வோர் உபரிக் கோட்பாடு "குறைந்துசெல் இறுதிநிலை பயன்பாட்டு விதியில்" இருந்து பெறப்பட்டது என்றும் ஆல்பிரட் மார்ஷல் கூறுகின்றார்.



http://www.trbtnpsc.com/2013/07/trb-questions-and-study-materials.html

# குறைந்துசெல் இறுதிநிலை பயன்பாட்டு விதியும் நுகர்வோர் உபரியும்

- குறைந்துசெல் பயன்பாட்டு விதிப்படி, ஒரு பொருளை தொடர்ந்து நுகருக்கின்ற போது, அதன் இறுதிநிலைப் பயன்பாடு குறைந்துக் கொண்டு செல்லும்.
- இறுதிநிலைப் பயன்பாடுகள் குறைந்து செல்வதால், நுகர்வோன் கூடுதலாக வாங்கப்படுகின்ற பண்டங்களுக்கு தரத் தயாராக உள்ள விலை குறைந்து கொண்டு செல்கின்றது.
- இறுதிநிலைப் பயன்பாடும் அப்பொருளின் விலையும் சமமாக உள்ள நிலையில் நுகர்வோன் சமநிலை அடைகின்றான். ஆக நுகர்வோன் உண்மையில் தந்த விலை இறுதிநிலைப் பயன்பாட்டுக்கு சமம்.

நுகர்வோர் உபரி = மொத்தப் பயன்பாடு (TUx) - (MUx.Qx) ( இறுதிநிலைப் பயன்பாடு x நுகரப்பட்ட பண்டங்களின் எண்ணிக்கை )

## எடுகோள்கள் :

1. பயன்பாட்டை அளக்கலாம்
2. பணத்தின் இறுதிநிலப் பயன்பாடு மாறாமல் நிலையாக இருத்தல்
3. நுகர்வோனின் விருப்பம், சுவை மற்றும் தேர்வு இவைகளில் மாற்றமில்லை
4. பொருளின் பயன்பாடு அதன் அளிப்பை சார்ந்திருக்கும்
5. பதிலீட்டுப் பண்டங்கள் இல்லை
6. குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதி செயல்படும்
7. அங்காடியில் நிறைவுப் போட்டி நிலவுகிறது.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## நுகர்வோர் உபரிக் கோட்பாடு திறனாய்வு :

- பேராசிரியர்கள் நிக்கல்சன், கேனன், இராபின்சன், தேவன் போர்ட் போன்றவர்கள் இக்கோட்பாட்டை குறை கூறுகின்றனர்.
- பேரா. நிக்கல்சன் இதனை ஒரு பயனற்ற கற்பனையாகக் கருதுகின்றார்.
- பேரா. சாமுவேல்சன் இக்கோட்பாட்டை கணக்கில் புதில் கற்பனை உபரி என்கின்றார்.
- பேரா. ராபர்ட்சன் நுகர்வோர் உபரிகள் நீர் குமிழிகள் போன்றது. தோன்றி தோன்றி மறைதல் வேண்டும். நுகர்வோர் உபரி கிடைக்காத உலகம் சலிப்புடைய உலகம் என்கிறார்.
- நுகர்வோர் உபரி அனைத்துப் பொருட்களுக்கும் பொருந்தாது. அத்தியாவசிய பொருள்களை நுகரும் போது நுகர்வோர்கள் நுகர்வோர் உபரியை கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை.
- பணத்தின் இறுதிநிலைப் பயன்பாடு நிலையாக இருக்கும் என்ற எடுக்கொள் நடைமுறைக்கு ஒவ்வாத ஒன்று.
- பேரா. யுலிஸி கோப்பி நுகர்வோர் எச்சமே இல்லை என்கின்றார். நுகர்வோர் உபரி சார்ந்த சில கருத்துக்கள்
- பேட்டன் ( Pattern) என்பவர் நுகர்வில் இரு நிலைகள் உள்ளதாக கூறுகின்றார்.

    1. துன்பப் பொருளியல் ( pain Economy ) இன்றியமையாத பண்டங்களின் விருப்பம் இதில் நுகர்வோர் உபரி இருப்பதில்லை ( நுகர்வோர் உபரி எதிர்மறையில் ( எதிர்பார்க்கின்ற விலையைவிட விற்பனை விலை அதிகமாக இருத்தல்)

www.Padasalai.Net Achamillai 9786226622



http://www.trbtnpsc.com/2013/07/trb-questions-and-study-materials.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com



இருந்தால் அவர்கள் துன்பநிலை பொருளாதாரக் கட்டமைப்பில் வாழ்ந்துவருவதாக கருதலாம் )

2. இன்பப் பொருளியல் ( pleasure Economy ) ஆடம்பரப் பண்டங்கள் இதில் நுகர்வோர் உபரி காணப்படும் ( நுகர்வோர் உபரி கிடைத்துக் கொண்டே இருந்தால் இன்ப நிலையில் மக்கள் வாழ்ந்து வருகின்றனர் என கருதலாம். )

⇨ பொருளின் விலை அதிகமாயிருந்தால் நுகர்வோருக்கு கிடைக்கும் நுகர்வோர் எச்சம் குறைவாக இருக்கும். மாறாக விலை குறையும் போது நுகர்வோர் எச்சம் அதிகமாக இருக்கும்.

⇨ அதிக தேவை நெகிழ்ச்சியுள்ள பொருட்க்களுக்கு நுகர்வோர் உபரி குறைவாகவும், நெகிழ்ச்சியற்ற பொருட்களுக்கு நுகர்வோர் உபரி அதிகமாகவும் காணப்படும்.

⇨ இன்றியமையாத பொருட்களில் நுகர்வோர் உபரி அளவின்றி இருப்பதால் கணிக்க இயலாது.

## நுகர்வோர் உபரியின் பயன்கள்

1. இரு வேறு நாடுகளில் அல்லது இடங்களில் வாழும் மக்களின் வாழ்க்கத் தரத்தை ஒப்பிடுவதற்க்கு பயன்படுகின்றது.
2. விலையை நிர்ணயிக்க முற்றுரிமையாளருக்கு உதவுகிறது.
3. பன்னாட்டு வாணிபத்தில் ஏற்படும் நன்மையை அறிய உதவுகிறது.
4. பயன் மதிப்பிற்க்கும் மாற்று மதிப்பிற்க்கும் உள்ள வேறுபாட்டை விளக்குகிறது.

www.Padasalai.Net Achamillai 9786226622



http://www.trbtnpsc.com/2013/07/trb-questions-and-study-materials.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com



5. முற்றுரிமை விலைபேதம் காட்டலில் காணப்படும் மூன்று நிலைகளில் முதல் நிலை நுகர்வோர் உபரியை அடிப்படையாகக் கொண்டது.
6. நிதி அமைச்சருக்கு நுகர்வோர் உபரி அதிகமுள்ள பொருட்கள் மீது வரி விதிக்க உதவுகிறது.

- ⇨ நுகர்வோர் உபரி எப்போதும் நேர்மறையாகத்தான் இருக்கும்
- ⇨ நுகர்வோர் உபரி குறைந்து செல் பயன்பாட்டு விதி அடிப்படையில் அமைந்துள்ளதால் - பயன்பாடு அதிகமாக இருக்கும் பொருளுக்கு கொடுக்க நினைக்கும் விலை அதிகமாக இருக்கும்
- ⇨ இறுதிநிலைப் பயன்பாடு குறைய குறை கொடுக்க நினைக்கும் விலையும் குறையும்
- ⇨ பகுத்தறிவுள்ள நுகர்வோன் கொடுக்க நினைக்கும் விலையைவிட உண்மை விலை அதிகமாக இருப்பின் அவர் அப்பொருளை வாங்க மாட்டார்.
- ⇨ மக்களுக்கு கிடைக்கின்ற நுகர்வோர் உபரி எதிர்மறையில் இருந்தால் அவர்கள் துன்ப நிலைப் பொருளாதார கட்டமைப்பில் ( Pain Economy ) வாழ்ந்து வருகின்றனர் என்று கருதலாம் என பேரா.பேட்டன் குறிப்பிடுகின்றார்.

- ⇨ தேவை நெகிழ்ச்சி முற்றிலும் நெகிழ்வுள்ளதாக இருக்கும்போது நுகர்வோர் உபரி பூஜியமாக இருக்க வாய்ப்புள்ளது

- ⇨ தகு விலை உண்மை விலைக்கு சமமாக இருக்கும் போது நுகர்வோர் உபரி பூஜியம் ஆக இருக்கும்



http://www.trbtnpsc.com/2013/07/trb-questions-and-study-materials.html

## ஹிக்ஸின் நுகர்வோர் உபரிக் கோட்பாடு

- ஹிக்ஸ் "மதிப்பும் முதலும்" என்ற நூலில் நுகர்வோர் உபரி கருத்தை விளக்கியுள்ளார்.
- ஹிக்ஸ் எந்தவித எடுகோள்களின்றி சமநோக்கு வளைகோட்டின் துணையுடன் நுகர்வோர் உபரிக் கருத்தை விளக்கியுள்ளார்.
- ஹிக்ஸ் நுகர்வோர் உபரி கருத்தை விளக்கும் போது அதனை "ஈடுகட்டும் மாறுதல்" ( Quantity compensating variation) என்று கூறுகின்றார்.

அச்சமில்லை கல்வி அறக்கட்டளை

அச்சமில்லை கல்வி மாத இதழ்

The No.1 Institute for Economics

Achamillai Educational Trust

www.Padasalai.Net

Achamillai study material

- TRB போட்டி தேர்விற்க்கு பொருளாதாரப் பாடத்திற்கு மட்டும் Study Material சிறப்பான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது.
- Unit wise – study materials சிறப்பான முறையில் எளிய நடைமுறையில் தெளிவான விளக்கத்துடன் தயாரிக்கப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு Unit க்கும் பயிற்சி வினாக்கள் விடைகளுடன் கொடுக்கப்பட்டுள்ளது.
- கடந்த 2001 முதல் 2017 வரை நடத்தப்பட்ட முந்தைய TRB போட்டித் தேர்வுகளின் கேள்விகள் விடைகளுடன் கொடுக்கப்பட்டுள்ளது.
- 50 மாதிரி பயிற்சி வினதாள்கள் விடைகளுடன் தயாரிக்கப்பட்டுள்ளது
- 2200+ பக்கங்கள் அனைத்தும் Printed Materials ஆகும்